தமிழ் முரசு

ஆசிரியர்: ம.பொ.சிவஞான

யப்பன்

தமிழ் முரசு

(மாதமிருமுறை)

ஜனவரி முதல் தேதியன்று

முதல் இதழ்

வெளிவரும்

ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0
6 மாதச் சந்தா	ரூ. 3—0—0
தனி இதழ்	0—4—0

வெளிநாடு

ஆண்டுச் சாந்தா	ரூ. 7—8—0
6 மாதச் சந்தா	ரூ. 4—0—0
தனி இதழ்	0—5—0

ஏஜண்டுகள் தேவை

: விவரங்களுக்கு எழுதுக :

தமிழ் முரசுப் பதிப்பகம்.

233, லிங்க செட்டி தெரு,

சென்னை -1

தமிழ் முரசு

தொகுதி : க | விய-மார்கழி-களஉ 1-1-1947 | பகுதி : க

பொருளடக்கம்

முரசொலி — தலையங்கம் ... 3

முரசு முழங்கட்டும் ! ... 7

நமக்கு வழி காட்டுகிறார்கள் — மூ. பொ. சி. ... 9

மதுவிலக்கும், தொழிலாளர்களும் 13

செய்திகள் 15

தமிழ் முரசு (பாட்டு) — சுத்தானந்தர் ... 17

தமிழன் யார் ? — கோ. பாலகிருஷ்ணன் ... 18

உழவன் வாழ்வு — மு. வரதராசன் ... 20

தமிழன் - அன்றும் இன்றும் — அ. ச. ஞானசம்பந்தம் ... 29

மனிதன் பேசுகிறான் — போ. குருசாமி ... 33

நீதி மன்னன் நெடுஞ்செழியன் — "ஞானம்" 36

தாய் — 'வல்லிக்கண்ணன்' ... 41

மதிப்புரை ... 48

கதைகளில் வருவன கற்பனைப் பெயர்களே.

விலை 4 அணா

"சினிமா ரசிகன்"

(இலங்கையின் உன்னத மாதப் பத்திரிகை)

மூவர்ண அட்டை, கலர்ப் படங்கள், ருசிகர சினிமாச் செய்திகள், பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகள், கதைகள், கவிதைகள், ஸ்ரீ லக்ஷ்மிகாந்தனைப் பற்றிய விவரங்கள், கிண்டல் நிறைந்த கேள்வி-பதில்கள், ரசிகமகா சபை விவாதங்கள். மற்றும் பல நூதன அம்சங்கள் நிரம்பியது.

தனிப்பிரதி அரை ரூபாய்.

ஏஜெண்டு இல்லாத இடங்களுக்கெல்லாம் டெபாசிட்டுடன் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர் :

"சினிமா ரசிகன்" ஆபீஸ்.

207-A, பார்பர் ஸ்ட்ரீட், கொழும்பு.

தமிழ்ச் சுடர்

(மாதம் ஒரு புத்தகம்)

பதிப்பாசிரியர்

மீ. சு. இளமுருகன்

வரலாறு, பொருளாதாரம், கவிதை, கட்டுரை இலக்கியம் எழுதவல்ல தமிழ் நாட்டுச் சிறந்த மேதைகளது எழுத்து நிறைந்த புத்தகம்.

பன்னிரண்டு புத்தகங்க்ள்	4—8—0
தனிப் புத்தகம்	0—6—0

எங்கும் விற்பனையாளர்கள் தேவை

மேலாளர் :-

'தமிழ்ச் சுடர்' பதிப்பகம்.

பெரியகுளம், மதுரை மாவட்டம்.

முரசொலி

'தமிழ் முரசு' இன்றைய் நன்னாளிலே இடம் பெயர்கின்றது. புத்தக உலகம் என்னும் திரையை விலக்கிக் கொண்டு பத்திரிகை உலகத்தில் பவனி வருகின்றது. முரசொலி தமிழினத்துக்குப் புதிதல்ல.

பண்டை நாளிலும் முரசு பவனி வந்ததுண்டு. எப்போது? மறவர் நாட்டை மாற்றார் முற்றுகை யிட்டபோது, தமிழினத்தின் வீரத்தைப் பிற இனத்தார் பழித்துப் பேசியபோது மண்ணதிர, விண்ணதிர, மாற்றார் மனமதிர முழங்கியதுண்டு.

தமிழ் முரசு வெளிப்பட்ட ஒவ்வொரு சமயத்திலும் வெற்றியன்றி வேறொன்றைக் கண்டதில்லை. இது பண்டை நாளைய தமிழ் முரசின் பவனி வரலாறு.

முற்றுகை

இன்றும் தமிழகத்தில் 'முரசு' முழங்குகிறது. காரணம் என்ன? பிற இனத்தவரது நிலத்தை, பொருளை அல்லது உரிமையை ஆக்கிரமிக்க அல்ல.

தமிழ்நாடு முற்றுகை யிடப்பட்டுள்ளது. இன்றல்ல, நேற்றல்ல; பல நூற்றாண்டுகளாக.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமிழரின் அரியாசனத்தைப் பிடித்து ஆட்சி செலுத்துகின்றது. ஆங்கிலத் துருப்புகள் அந்த ஆட்சியை அரண் செய்து காக்கின்றன.

பொருளாதாரத் துறையில் ஏகாதிபத்தியச் சூழலில் ஆயுத பலத்தால், ஆட்சியின் துணையால் தங்கு தடையின்றித்

தாராளமாக நடைபெறுகின்றது தமிழ் நாட்டில். போதாக் குறைக்குப் பிற இனத்தவரின் மூலதனங்கள் வேறு தமிழ் நாட்டைப் படை யெடுத்துப் பாழ் செய்கின்றன.

வளமான நிலமிருந்தும், பொன் கொழிக்கும் பில மிருந்தும், தமிழர் வாழ வகையின்றி உழைப்புக்கு அழைப்பு வந்த இடமெல்லாம் ஓடி ஓடி அல்லற்படும் நிலைமை நம் உள்ளத்தை உறுத்துகிறது.

மொழித் துறையிலும் முற்றுகை நிலைதான். இசை யரங்கில் தெலுங்கு; இறைவன் கோயிலில் வடமொழி; அரசியலில் ஆங்கிலம். பிறமொழிகள் தமிழ் நாட்டை முற்றுகையிட்டுத் தமிழ் மொழியை அடுப்பங்கரையளவில் சிறைப்படுத்திவிட்டன. தமிழன் தமிழை மறந்ததோடு, தமிழ்த் தெய்வமும் தமிழை மறந்தது.

முறியட்டும் :

தமிழ் நிலம்—தமிழினத்தவரின் தாயகம்—பிற இனத்தவரால் முற்றுகையிடப்பட்டுள்ளது. தெற்கே திரு விதாங்கூரில்; வடக்கே திருப்பதியில். சென்னை நகர் மீதும் ஆதிக்க வாதிகளின் ஆசை அரும்பெடுத் திருக்கிறது. ஆகவே, தமிழ் நிலத்தின்மீது, தமிழ் நாட்டின் வளத்தின் மீது, தமிழ் மொழியின்மீது போடப்பட்டுள்ள முற்றுகையை முறியடிக்க வேண்டுமென்றே 'முரசு' கிளம்புகிறது.

பண்டை நாளில் முடி மன்னரின் ஆணைப்படி முரசு அறை யப்பட்டது. அந்த நிலை இன்றில்லை. இன்று மக்களின் சார் பாக, மக்கள் வாழ்வுக்காக அவர்களது கோரிக்கையை அறி விக்கவே 'முரசு' முழங்குகிறது.

இந்த முற்றுகை நிலையை முறியடித்துத் தமிழ் நாட்டில் தமிழரசு கண்டு, அதுவும் முடியரசன்றிக் குடியரசாக' அந்தக் குடியரசும் சோஷலிசக் குடியரசாக இருக்க வேண்டும் என்பதற்காகவே மீண்டும் 'தமிழ் முரசு' முழங்குகின்றது.

தமிழ் மக்களே! அடங்கிக் கிடந்த நாள் அடிமாண்டு போகட்டும். ஒடுங்கிக் கிடந்த நாள் ஒழிந்து தீரட்டும். இனியேனும் முரசொலி கேட்டு முன்னணியில் சேருங்கள்.

தமிழர் திருநாள்

இவ்வாண்டுப் போங்கல் விழாவை தை மாத முதல் நாளிலிருந்து ஒரு வாரம்வரையில், தமிழர் விழாவாகக் கொண்டாடுமாறு தமிழ் மக்களை வேண்டுகின்றோம். தமிழர் உழைப்பாளி மக்கள். எனவே, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் பொங்கல் விழாவைத் தமிழர் விழாவாகக் கொண்டாடுவதே சாலச் சிறந்ததாகும்.

தமிழகத்தைத் தாயகமாகவும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும் கொண்ட எவரும்—அவர் எந்தச் சமயத்தவ ராயினும்—தமிழினத்தவரே யாவார். எனவே, பொங்கல் திருநாளைச் சமயப் பண்டிகையாகக் கொண்டாடுவதைவிடத் தமிழர் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்று எண்ணுகிறோம்.

தமிழர் திருநாளில் கட்சிப் பிணக்குகளுக்கு இடந் தராது எல்லாக் கட்சித் தமிழர்களும் இணைந்து நின்று சங்க கால இலக்கியங்களைச் சான்றாகக் கொண்டு தமிழர் பண்பாட்டை வீதிதோறும், வீடுதோறும் பரப்புங்கள்!

'இழந்த எல்லைகளை மீண்டும் கைப்பற்றியே தீருவோம்' என்று சபதம் மேற்கொள்ளுங்கள்.

சென்னை நகரில் தமிழரசுக் கழகத்தார் இத்துறையில் திட்டமிட்டு வேலை செய்யத் தீர்மானித்துவிட்டனர். இதேபோல் எல்லா ஜில்லாக்களிலும் உள்ள மாணவர் கழகங்கள், தொழிலாளர் சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகிய அனைத்தும் ஒன்று கூடியோ, தனித்தனியாகவோ விழாக் கொண்டாட விழையுமாறு வேண்டுகிறோம்

தமிழர் திருவிழாவில் 'தமிழ் வாழ்க' என்ற வாழ்த்தொலி எங்கும் முழங்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அது மட்டும் போதாது. அடிமை என்னும் நச்சுக் காற்றில் தமிழ்ச் சோலை தழைத்து வளராது. உரிமை இழந்த தமிழினத்தார் உலகோர்முன் நிமிர்ந்து நிற்றல் முடியாது. எனவே, தமிழர் திருநாளில் 'தமிழகத்தில் தமிழரசு வேண்டும்.' 'தமிழருக்கும் சுய நிர்ணயம் வேண்டும்' என்ற சுதந்திரப் பேரொலியைத் தமிழர் முழங்கட்டும்.

"முரசு" முழங்கட்டும்!

வெற்றி முரசு

ஜாதி மத பேதமிவை சற்றேனு மின்றிநடு
நீதிநெறி எங்கும் நிறுவிடவே—ஓதுபுகழ்
முத்தமிழ் நாட்டில் முழங்கும் **தமிழ் முரசு**
நித்தமும் வாழ்க நிலைத்து

பேரும் புகழும் இமயத்தில்
    பிறங்கச் செய்து கொடிநாட்டிச்
சாரும் நாடு பலகொண்டு
    தருமம் தவறா தரசாண்ட
வீரத் தமிழர் முழக்கியஅவ்
    வெற்றி முரசே தமிழ்முரசாய்ப்
பாரில் என்றும் முழங்கஅருள்
    பாலித் திடுக பரம்பொருளே!

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

புரட்சி 'முரசு'

'தமிழ் முரசு' இது காறும் நூல் வடிவில் வெளி வந்தது. இனி அது செய்தித் தாள் வடிவில் வெளிவரும் என்று கேட்டு மகிழ்வெய்துகிறேன். 'தமிழ் முரசு' சில திங்களில் அரும்பெரும் வினைகளை ஆற்றியது. அது தமிழ் வளத்துக்கும், தமிழ் நாட்டின் விடுதலைக்கும், குடியாட்சிக்கும், பண்டை எல்லைக்கும் போராட்டமும் புரட்சியும்

நிகழ்த்தியது. இந்நிகழ்ச்சி 'முரசி'ல் தொடர்ந்து ஆக்க முறும் என்று நம்புகிறேன். 'முரசு' முழக்கம் நாடு முழுவதும் பெருகுவதாக!

'தமிழ் முரசின்' ஆசிரியர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் போராட்டத்துக்கும் புரட்சிக்கும் உரியவர் என்பதை யான் அனுபவத்தில் அறிவேன். அவர்தம் முயற்சி ஓங்கி வளர்வதாக.

'தமிழ் முரசு' வாழ்க! புரட்சி வெல்க!!

—திரு. வி. க.

முரசொலி பரவட்டும்!

தமிழ் நாட்டில் சிவஞான கிராமணி என்றால் அது ஒரு தனிப் பண்பு. அவர் எந்தத் துறையில் இறங்கினாலும் அங்கே வீரத் தத்துவத்தைக் காணலாம். அரசியலில் வீரராய் விளங்குகிறார் என்பது தமிழ் நாடு தெரிந்த விஷயம். சமூக இயலும் அப்படியேதான். தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம், தமிழ் இசை இவைகளிலும் அபூர்வமான ஆர்வத்தோடுதான் நிற்பார். இதுதான் சிவஞான கிராமணி. தமிழ் முரசில் வரும் தலையங்கங்களிலும் சிவஞான கிராமணியார் வீரத் தொனி கேட்கும். வாய்க்கு உவந்த வார்த்தைகள்; முரசொலி பரவுவதாக!

—டி. கே. சி.

நமக்கு வழி காட்டுகிறார்கள்

ம. பொ. சிவஞானம்

"கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்" என்றார் பாரதியார். இச்சொல் ஒடுக்கப்பட்ட எல்லா இனத்தவருக்கும், உரிமை இழந்த எல்லா நாட்டவருக்கும் ஊக்கம் தருவதாகும். தமிழினத்தவராகிய நாம், மொழியால், வாழ்க்கை நெறியால் தனி இனத்தவர் என்று கூறி வந்தோம்—இன்றல்ல, பன்னெடுங் காலமாக; அப்போதெல்லாம் பழிக்கப் பட்டோமே ஒழியப் பாராட்டப்பட்டதில்லை. ஆனால், நாம் மனம் உடைந்துவிடவில்லை. காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். பாரதியார் கூறியபடி காலம் மாறிவிட்டது. இத்தனை நாளும் இந்தியர் அனைவரும் ஓரே இனம் என்று நமக்குக் கற்றுத் தந்தவர்கள், அதையே கடைப்பிடிக்கும்படி கட்டளை இட்டவர்கள் இன்று வேறு மாதிரியாகப் பேசத் தொடங்கி விட்டனர். எல்லாம் நம் நல்ல காலத்துக்குத்தான்.

எல்லைப்புறக் காந்தி சொல்வதைக் கேளுங்கள் :—

> "இந்தியாவில் ஒரு மாகாணத்திலுள்ள மக்களுக்கும் இன்னொரு மாகாணத்திலுள்ள மக்களுக்கும் நாகரிகம், வாழ்க்கை முறை ஆகிய எல்லாவற்றிலும் கொஞ்சங் கூடச் சம்பந்தம் கிடையாது."

என்று கூறுகின்றார். மாகாணத்திற்கு மாகாணம் மக்களை மாற்ற வேண்டுமென்று ஜனாப் ஜின்னா சொல்லுவதற்கு எதிர்ப்பு இல்லாமல் கூறுகிறார். நாமும் இதை மனப் பூர்வமாக ஆதரிக்கிறோம், நமக்குப் பொருந்துவதால்.

அப்துல் கபார்கானைவிட இன்னும் ஒரு படி மேலே போகிறார் எல்லைச் சட்டசபைத் தலைவர் :

> " பஞ்சாபியரும் பட்டாணியரும் வெவ்வேறு தேசிய இனத்தவர். எனவே, இந்த இரண்டு இனத்தவரும் ஒரே தொகுதி அரசியலில் சேர்வதென்பது ஒரு நாளும் முடியாத காரியம் "

என்று ஐயத்துக்கு இடமின்றி அழுத்தம் திருத்தமாக அறிவித்துவிட்டார் அவர்.

இன்னும் ஒரு படி மேலே போய்ப் பஞ்சாபியருடன் சேர்ந்து வாழ முடியாததற்கு அறிவுக்கு உகந்த ஆதாரம் காட்டுகிறார் எல்லை நிதி மந்திரி:

> "எல்லாத் துறைகளிலும் முன்னேறிவிட்ட பஞ்சாபியருடன் பட்டாணியர் சேர்ந்து வாழவேண்டும் என்பது ஏழைப் பட்டாணியர் சுயமாக முன்னேறுவதைத் தடுப்பதாகும். எனவே, எல்லைப்புறத்தின் சொந்த விவகாரத்தில் பஞ்சாபியருக்கும் பங்கு உண்டு என்பதை ஏற்கமுடியாது."

என்கிறார். இதைத்தான் நாமும் சொல்லுகிறோம். பஞ்சாபியர், பட்டாணியர் தனித்தனி இனம் என்பதற்கு எவ்வளவு காரணங்கள் உண்டோ அதை விட அதிகமாகக் கூறலாம், தமிழர் தனி தேசிய இனம் என்பதற்கு.

இதைவிட, அசாம் மாகாண அரசியலில் நடக்கும் அற்புதங்கள் தமிழரின் தனியரசுக் கோரிக்கைக்கு ஒவ்வொரு படியிலும் வழிகாட்டுபவையாய் இருக்கின்றன.

> "அசாம் மாகாண அரசியலை அசாமியரே தயாரிக்க வேண்டும். இதில் வங்காளியருக்கோ அல்லது வேறு எந்த இனத்தவருக்கோ துளியளவும் உரிமை இருக்கக் கூடாது. இந்தச் சுய நிர்ணயக் கோரிக்கையை நிறை

வேற்றுவதற்கு, அவசியமானால் காங்கிரசுக்கு
வெளியே நின்றும் போராடுவோம்."

என்று அசாம் காங்கிரஸ்வாதிகள் ஆரவாரம் செய்கின்றனர். அதற்கு ஆசி கூறுகிறார் காந்தியடிகள். அது மட்டு மல்ல: "தொகுதி அரசியலை அசாம் ஏற்குமானால் அதன் ஆத்மா அழிந்துவிடும்" என்று எச்சரிக்கை செய்கிறார். "காந்தியே சொன்னாலும் ஏற்க மாட்டோம்" என்று முழங்குங்கள் என்கிறார்.

"இந்தியாவின் சுதந்திரத்துக்கு இதுவே அடிப்படை" என்றும் கூறுகிறார். அசாமியருக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு 'யூனிட்'டுக்கும் சுயநிர்ணயம் இருக்க வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.

'A' தொகுதியில் தமிழ் நாடு இணைக்கப்படக் கூடாது; தமிழ் நாட்டு அரசியலைத் தமிழரே தயாரிக்கச் சுயநிர்ணயம் வேண்டும்' என்று சென்னை எழுத்தாளர் மகாநாட்டில் தீர்மானம் வந்தபோது அதைத் 'தமிழ்ப் பாகிஸ்தான்' என்றார் ஒரு நண்பர். தமிழ் நாட்டுப் பத்திரிகைகளோ, அந்தத் தீர்மானத்துக்கு முக்கியம் தராமல் மூலையில் ஒதுக்கின. இதையே அசாமியர் கூறினால் ஆறு 'காலம்' தலைப்புடன் அறிவிக்கின்றன. அது மட்டுமா? தலையங்கம் எழுதியும் தட்டிக் கொடுக்கின்றன. சுயநிர்ணய உரிமை என்பது வடக்கே தேசபக்தியாக மணக்கிறது; பாகிஸ்தானுக்கு மாற்றுவாதமாகவும் படுகிறது. தெற்கே சொன்னால் அதுவே பாகிஸ்தானைக் காட்சிஅளிக்கிறது!

தமிழ் நாட்டுதேசியவாதிகளே! இத்தனை நாளும் யார் நமக்கு வழி காட்டினார்களோ அவர்களே இப்போதும்

நமக்கு வழிகாட்டுகிறார்கள்; காலம் மாறுகிறது; கட்டுப்படுத்திய சங்கிலி முறியும் சத்தம் காதில் கேட்கிறது. பாசாங்கு செய்து பாதைக்குக் குறுக்கே நிற்க வேண்டாம். அசாமிய தேசியவாதிகளைப் போன்று நாமும் தனியாக அரசு வேண்டுவோம். இரவு நீங்கியதும் காலைக் கதிரவன் கண்ணுக்குத் தோற்றுவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் ஏகாதிபத்திய அடிமைத்தனம் நீங்கியதும் தமிழகத்தில் தனியரசு தோன்றுவது. காலத்தைக் கடத்தலாம்; காரியத்தை நிறுத்த முடியாது. தமிழ் இனம் விழித்துக் கொண்டது. அதன் முன்னேற்றத்தைத் தடுக்கும் சக்தி இவ்வுலகத்திலில்லை.

Demand

PRABHAT INK

High Grade

for Fountain Pens

Available From

PRABHAT TRADERS

Stationers, General Merchants Importers & Exporters

4 & 5, Badrian Street, G. T., Madras.

Tele:—PRABAKAR, Madras.

Branches at :

KUMBAKONAM, TINNEVELLY.

ஆசிரியருக்குக் கடிதம்

அண்ணாமலை நகர்,
10-11-46

மது விலக்கும் தொழிலாளரும்

அன்புமிக்க ஆசிரியருக்கு,

மதுவிலக்குத் திட்டம் அமுலுக்கு வந்து பலமாத காலத்திற்குள்ளாகி விட்டது. ஆனால் இன்று வரை அதனால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான கள்ளிறக்கும் தொழிலாளர்களின் பிழைப்புக்கான திட்டம் எதுவும் செயலுக்கு வரக் காணோம். இன்றியமையாத சீர்திருத்தமாகிய மதுவிலக்கைப் பெற்ற களிப்பினாலோ என்னமோ மக்களும், தலைவரும் கணக்கற்ற நம்நாட்டு பழங்குடி மக்களைப்பற்றி, அவர்களுடைய சொல்லொணாத் துன்பத்தைப்பற்றி எண்ணாதிருக்கின்றனர்.

எட்டு மாவட்டங்களில் மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. மகிழ்ச்சியுடன் வரவேற்றோம், கள் இறக்கும் தொழிலாளர்கள் உள்பட. ஆனால் அதே நேரத்தில், இதனால் தாக்கப்படும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு உடனடியாகப் பரிகாரம் ஏதாவது செய்யப்படுமென்று நம்பினோம். இன்றுவரை ஒன்றையும் காணோம். திட்டங்கள் தயாரித்து நடைமுறையில் வருவதற்குச் சிலமாதங்கள் பிடிக்காதா என்று சமாதானம் கூறலாம். ஆனால், மதுவிலக்கை அமுலுக்குக் [illegible] வரப்போகிறவர்கள் அதைக் கொண்டுவருவதற்குமுன் [illegible] நிச்சயமாகப் பாதிக்கப்படப்போகும் ஆயிரக்கணக்கான எளிய குடும்பங்களின் வாழ்வுக்கான திட்டத்தை தயாரித்துக்கொள்ள வேண்டாமா?

நிரந்தர நிவாரணத் திட்டங்களைச் செய்யுமுன் இப்பயங்கர நிலையைத் தடுக்க ஒரு இடைக்கால நிவாரணத்தையாவது இவர்களுக்கு அளித்திருக்கக் கூடாதா!

கள்ளிறக்கும் தொழிலாளர்களின் துன்பநிலை மனத்தினால் எண்ணவே முடியாதது. அவர்களில் அநேகமாய் யாவரும் மிகவும் வறுமை நிலையிலுள்ளோர்: வேலை செய்து கூலிபெற்றால்தான் வயிற்றுக் கஞ்சிக்கு வழியுண்டு; இல்லாவிட்டால் வயிற்றில் ஈரத்துணிதான்.

மற்றத் தொழிலாளர்கள் என்றால் இந்நேரம் எவ்வளவோ [illegible]ர்ச்சிகள் நடத்தியிருப்பர். ஆனால் இத்துர்ப்பாக்கிய வர்க்கம் கல்வியறிவு வாசனைகூட இல்லாமற் செய்யப்பட்ட இனம். [illegible]ரசாங்கத்தை நோக்கி உரிமை கேட்கக்கூட வகையற்ற வாயில்லா இனம். அதனால்தான் மந்திரி சபையும் மக்களும் இவர்களை மறந்துவிட்டனர்.

அக்டோபர் முதல் தேதி மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. 2ம் தேதி மாலை 6 மணி இருக்கும். தலையில் பெரிய கூடைகளுடனும் இடுப்பில் இளங்குழவிகளுடனும் நூற்றுக் கணக்கான பெண் உருவங்கள் கூடலூர் ரயிலடியில் காணப்படுகின்றனர். தலையிலுள்ள கூடைகளில் பழைய துணிகள் இடுப்பிலுள்ள குழவிகளிடமிருந்து அழுகுரல். அவர்களுடன் பல ஆண் உருவங்கள் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு வாடிய முகத்துடன் உடனிருக்கின்றன. எல்லா உருவங்களும் ஊர் நோக்கித் தள்ளாடிக்கொண்டே நடக்கின்றன. இவர்கள் வேறு யாருமல்ல. சேலம் மாவட்டத்தில் மது விலக்கினால் பாதிக்கப் பட்ட நூற்றுக் கணக்கான குடும்பங்கள்தான். ரயிலடியை விட்டு எங்கு போவது என்று தெரியாமலேயே கால்கள் எங்கெங் கெல்லாம் அழைத்துச் சென்றனவோ அங்கெங் கெல்லாம் சுற்றித் திரிந்தனர். இருட்டியதும் ரோட்டின் ஓரங்களிலும் வீட்டுத் திண்ணைகளிலுமாக கூடைகளைக் கீழே போட்டு விட்டுத் தாங்களும் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டனர். மதுவிலக்கு வரவைக் கண்டு எல்லோரும் மகிழ்ச்சி கொள்ளும் நேரத்திலே இப் பாட்டாளி மக்கள் துன்பக் கடலிலே ஆழ்ந்திருக்கின்றனர். மதுவிலக்கை அவர்கள் காய்கின்றனர், குற்றம் மந்திரிசபைமீது இருப்பதைக்கூட உணரமுடியாமல், வீட்டைத் துறந்து நாடோடிகளாகிவிட்டனர். பங்கீடு காலம் ; அரிசிக்கு வழியில்லை ; அரிசி கிடைப்பதானாலும் கையில் காசு இல்லை. இக் காட்சியைக் கண்ணுற்ற நேரத்திலே எனது கண்கள் நீரைப் பெருக்கின. அவர்களுடன் அமர்ந்து அவர்கள் நிலையைப் பற்றி விசாரித்தேன். அவர்கள் மதுவிலக்கைச் சபித்தனர். பொழுது விடிந்ததும் அவர்களை அங்குக் காணவில்லை. அவர்கள் இப்போது—ஆம் நாடாளப் பிறந்த அவர்கள்—நாடோடிகளாகி விட்டனர். நாடோடிகள் வேறிடம் சுற்றச் சென்று விட்டனர். இத்தகைய காட்சி கூடலூரில் மட்டுமல்ல, நாடு பூராவும் அன்று நடந்திருக்கும்.

மந்திரி சபைக்கு ஒன்று கூற விரும்புகிறேன். ஒரு புறம் எங்கும் அழுகுரல்தான் கேட்கிறது, மதுவிலக்கு வருகையால் மக்கள் மகிழ்வடைகையில், அதனால் தொழிலிழந்த பாட்டாளி மக்களும் சேர்ந்து மகிழ்வதாக அம் மகிழ்ச்சி இருக்கவேண்டும்.

பொதுமக்களுக்கும் ஒன்று கூறுகிறோம். நாட்டின் நல் வாழ்வுக்காக ஆயிரக் கணக்கான பாட்டாளிகள் தியாகத் தீயில் குளித்திருக்கின்றனர்; அவர்களை மறந்தால் நாட்டு மக்களாகிய நாம் நன்றி மறந்தவர் களாவோம்.

ப. தண்டபாணி

செய்திகள்

தமிழரசுக் கழகம்

கடந்த நவம்பர் மாதம் 21-ந் தேதி, மாலை 'தமிழ் முரசு' காரியாலயத்தில் தமிழரசுக் கோரிக்கையை ஆதரிப்போரின் கூட்டம் ஒன்று கூடியது. நகரின் பல பாகங்களிலிருந்தும் சுமார் எழுபது பேருக்கு மேல் வந்திருந்தனர். திரு. ம. பொ. சிவஞானம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

தலைவர் முகவுரையில், தமிழகத்திற்கு வெளியே திருவிதாங்கூர், தென் ஆப்பிரிக்கா, மலேயா, சிங்களம் முதலிய பிரதேசங்களில், தமிழர்கள் படும் அல்லல்களையும், அவர்கள் விஷயத்தில் தமிழ் நாட்டவர் அக்கரை கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் விரித்துக் கூறினர்.

மேலும், பிரிட்டிஷ் மந்திரி சபையினர் திட்டத்தின்படி, தமிழ் நாடு, 'ஏ' தொகுதியில் சேர்க்கப்பட்டால் ஏற்படும் கேடுகளையும், எடுத்துக் காட்டினர். நெடுநேர ஆலோசனைக்குப் பிறகு, 'தமிழரசுக் கழகம்' என்ற பெயருடன் ஒரு கழகம் நிறுவப்பட்டது.

பின்கண்டவர் அதன் செயற் குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: ம. பொ. சிவஞானம். **செயலாளர்:** கொ. மோ. ஜனர்த்தனம். **துணைச்செயலாளர்:** ஊ. சண்முகம். **பொருட்காப்பாளர்:** கு. குப்புசாமி.

உறுப்பினர்கள்: திருவாளர்கள், ஆறுமுகம், தியாகராஜன், அன்பு, கணபதி, சி. வேங்கடசாமி, லூயிஸ், மு. கோவிந்தசாமி,

க. பொன்னுசாமி, தாமோதரம், ஜி. சுப்பிரமணியம், நந்த கோபால், சுப்பிர மணியம்.

காங்கிரஸ் கண்காட்சியில் தமிழ் உணர்ச்சி

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியாரால் சென்னையில் நடத்தப் பெறும் அகில இந்தியச் சுதேசிப் பொருட்காட்சியைத் தமிழகத் தலைவர் திரு. வி. க. அவர்கள் சென்ற மாதம் 23-ம் தேதி மாலை திறந்து வைத்தார். எடுத்ததற்கெல்லாம் வெளி மாகாணத் தலைவர்களை அழைப்பது என்ற வழக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தது வரவேற்கத் தக்கது.

அதே கண்காட்சியில் தமிழ் நாட்டுச் சுதந்திரப் போரின் ஆதித் தலைவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் உருவச்சிலை திறக்கப்பட்டது. அவரது சேவையை நினைவூட்ட "எஸ். எஸ். சிதம்பரம்" என்ற பெயருள்ள மாதிரிக் கப்பல் ஒன்று நீரில் மிதக்க விடப்பட்டது.

சென்னை தமிழ் எழுத்தாளர் மாநாட்டுத் தலைவர்
[illegible] அவர்களுக்கு வரவேற்பு.

தமிழ் முரசு

சுத்தானந்த பாரதியார்

முரசு கொட்டி முந்து செல்லுவோம்—வாரீர்
முத்தமிழுக் குலகை வெல்லுவோம்
அரசு நாட்டி ஆட்சி செய்குவோம்—நம்
ஆண்மை கொண்டு மேன்மை எய்துவோம்...முரசு

வலிவு மிக்க வளவர் போலவே—தென்
மதுரை யாண்ட செழியர் போலவே
பொலிவு மிக்க சேரர் போலவே—இன்று
புகழ் சுமந்து மகிழ்வு கொள்ளுவோம் ...முரசு

நெருப்பு கக்கும் நிருதர் தேக்கினும்—மூந்
நீரின் வெள்ளம் போல முன்செல்வோம்
விருப்பு மிக்க வெற்றி நாட்டிலே—நாம்
விடுதலைக் கொடியை ஏற்றுவோம் ...முரசு

தோகை யர்பல் லாண்டி சைக்கவே—ஜய
துந்துமி முழங்கி ஏத்தவே
வாகை மீது வாகை சூடியே—நாம்
மலையெனத் தலை நிமிருவோம் ...முரசு

தமிழன் யார்?

கோ. பாலகிருஷ்ணன்

நெற்றிக் கண்ணைக் காட்டியபோதும் குற்றம் குற்றமே என உரைத்தவன் தமிழன். இலங்கையினை ஆண்டு சிறந்தவன் தமிழன். பொன்னிமயம் வென்று புலிக்கொடி பொறித்தவன் தமிழன். கற்புத் தெய்வமாம் கண்ணகிக்குச் சிலை எடுக்க வடநாட்டு மன்னர் தலையில் கல் கொணர்ந்தவன் தமிழன். கடாரம் வென்றவன் தமிழன். நிலம் விட்டுக் கலம் ஏறி நீரினைக் கடந்து பாரினை வென்றவன் தமிழன். உழைப்பின் உயர்வினை உணர்ந்தவன் தமிழன். ஓண்ட வந்தவர்களுக்கு உண்டியும், உடையும் உதவியவன் தமிழன். அன்னியரைத் தன்னிகராக மதித்தவன் தமிழன். கழுத்தினை வாள் துணிப்பதாயினும் அன்னியரின் தாள் பணிய மறுத்தவன் தமிழன். மானமே பெரிதென மதித்தவன் தமிழன். புலவர்களைப் போற்றியவன் தமிழன். வள்ளலாய் வாழ்ந்தவன் தமிழன். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று ஒன்றி வதிந்தவன் தமிழன். "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற பரந்த நோக்கைப் பண்பாய்க் கொண்டவன் தமிழன். நாகரிகத்தின் உச்சியை—கலையின் சிகரத்தைக் கண்டவன் தமிழன். படை கொண்டு நாடு பரப்பிய மோரியர் காலத்தும், மொகலாயர் காலத்தும் தனியரசு (தமிழரசு) செலுத்தியவன் தமிழன். தன் மானங் காத்தவன் தமிழன். இதெல்லாம் அன்று.

இன்று: மதவெறி பிடித்து—சாதியெனும் பேதைமை கொண்டு—வாழும் வகையிழந்து—வறுமையாற் பெருமையிழந்து—ஏழ்மையால் தாழ்மையுற்று—ஏற்ற மிழந்து, தோற்ற மிழந்து, ஆற்ற லிழந்து அல்ல லுறுபவன் தமிழன். சொந்த நாட்டை வந்தவர் ஆள விடுத்து, புகழ் இழந்து, மகிழ்விழந்து, இகழ்வடைந்து ஏங்கி நிற்பவன் தமிழன். உழைத்த நாட்டில் பிழைக்கும் வழியின்றி, கடன் கொடுத்தோர் கடுமொழி பகர, ஒருவேளைக் கஞ்சியின்றி உடல் நலிந்து, மெலிந்து, வலியிழந்து, வாட்டமுற்று, வற்றிய உடலொடும், ஒட்டிய வயிற்றொடும், கத்துகின்ற குழந்தைகளொடு மானங் காக்கப் போதுமான துணியுமின்றி, தவிக்கும் மனைவியை நடுத் தெருவில் விட்டுத் தென்னுப்பிரிக்காவில் சென்று சீரழிந்து சின்னுபின்னப் படுபவன் தமிழன். சிங்களத்தில் சென்று திண்டாடுபவன் தமிழன். பர்மாவில் சென்று பாடுபட்டும் பழி சுமந்து பதைப்பவன் தமிழன். வடநாட்டில் சென்று வாதை யடைபவன் தமிழன்.

ஏன்—சொந்த நாட்டிலேயே கீழான விலங்கைவிடக் கேவலமாக நடத்தப்படுபவன் தமிழன். சேரியில் தள்ளப் பட்டுக் கிடப்பவன் தமிழன். தொழுத கையும் அழுத கண்ணுமாய்த் துயரப்படுபவன் தமிழன்.

வாழ்விழந்து, ஆட்சியிழந்து, மொழியிழந்து, கலையிழந்து, எல்லாமிழந்து கோவணுண்டியாய் இருப்பவன் தமிழன்.

இதனை உணராது "தமிழன் யார்?" எனக் கேட்பவனும் தமிழனே!

உழவன் வாழ்வு

மு. வரதராசன்

பொங்கல் என்பது உழவர்களின் உரிமையான பண்டிகை யாகும். ஆனால் உழவர்களின் உண்மையான வாழ்க்கை நிலையை நினைக்கும்போது ஒருவகை மகிழ்ச்சியும் இல்லை; உள்ளம் பொங்குவதும் இல்லை.

இந்த நாட்டிலே உழவர்களின் பெருமையைப் பற்றிப் பேசாத நாக்கு இல்லை; எழுதாத கை இல்லை. திருவள்ளுவர் முதல் எல்லாப் புலவரும் புகழ்ந்து போற்றியது உழவுத் தொழிலையே. இன்றும், நகரங்களில் நான்கு பேர் சேர்ந்து பொழுதுபோக்காகப் பேசும்போது உழவுத் தொழிலைச் சிறப்பித்து அதன் உயர்வெல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

உழவுத் தொழில் உண்மையாகவே உயர்ந்த தொழில் தான்; உழவர்களும் நல்லவர்கள்தான். ஆனால் எந்தக் கொள்கையையும் வாழ்க்கையை ஒட்டி ஆராய்ந்து பார்க்க வேண்டும். வாழ்க்கை நிலைக்குப் பொருந்தாத பழங் கொள்கைகளைக் கண்மூடிப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது. அப்படிப் பேசிக்கொண்டிருப்பது திண்ணை வேதாந்தம் என்று பழிக்கப்படும். வாழ்க்கையும் கொள்கையும் வேறு படும்போது, ஒன்று வாழ்க்கையையாவது திருத்தி அமைக்க வேண்டும்; அல்லது கொள்கையையாவது மாற்றி எண்ண வேண்டும்.

வாழ்க்கையும் கொள்கையும் ஒன்றுக் கொன்று பொருந்துமாறு மாறுதல் செய்துகொள்வது என்று கேள்விப்பட்டதும் அஞ்ச வேண்டியதே இல்லை. எழுத்தாணியால் ஓலையில் எழுதுவதை விட்டு, உயர்ந்த பவுண்டன் பேனாவைக் கொண்டு பளபளப்பான வெள்ளைத் தாளில் எழுதும் வழக்கத்தை மேற்கொள்ள வில்லையா? கட்டுச் சோறு எடுத்துக்கொண்டு வெளியூர்க்குச் செல்வதை விட்டு விட்டு, கைச் செலவுக்குப் பணம் எடுத்துக்கொண்டு போய் ஓட்டல்களில் தங்கி உண்ணவில்லையா? காலால் நடந்து கோயில்களுக்குப் போய் வழிபடுவதை விட்டுவிட்டு, விரைந்து செல்லும் மோட்டார் காரில் ஏறிக் கோயில் வாயிற் படியில் இறங்கி உடம்பு நோவாமல் வழிபாடு செய்துவிட்டு வரவில்லையா ?

ஆடிக் கிருத்திகையன்று திருத்தணிகை மலை ஏறி முருகனை வழிபடுவதை இன்று சிலர் மாற்றிக் கொள்ளவில்லையா? ஆடிக் கிருத்திகையில் போனால், ஆயிரம் அல்லல் பட்டு முருகனை நினைப்பதற்கே நேரமில்லாமல், மக்கள் நெருக்கமும் கோர மரணங்களும் கொடிய துன்பங்களும் பற்றிய நினைவே நெஞ்சில் பதிந்து நாத்திகராய்த் திரும்ப வேண்டியிருக் கின்றதே என்று உணர்ந்து, சிலர் அந்த நாளில் போகும் வழக்கத்தை மாற்றிக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலேயன் கொண்டாடும் ஆண்டின் முதல் நாளில்-ஜனவரி முதல் தேதியில் திரள் திரளாகப் போய்ப் புது வழக்கம் ஏற்படுத்தி வருகின்றார்கள். இதுதான் வாழ்க்கைக்குப் பொருத்தமாகச் செய்து கொள்கின்ற மாறுதலாகும். இன்னும் சிலர் அவர்களைவிட ஒருபடி முன்னேறி, ஆடிக் கிருத்திகைக்கும் போகாமல், ஆங்கிலேயன் கொண்டாடும்

ஜனவரி முதல் தேதிக்கும் போகாமல், சாதாரண கிருத்திகைக்குப் போய் வரவில்லையா? அவர்களை விட முற்போக்கான சிலர், முருகனுக்கு எல்லா நாளும் திருநாளே என்று உணர்ந்து ஓய்வு வாய்த்தபோது ஏதாவது ஒரு நாளில் அமைதியாகப் போய் ஆரவாரம் இல்லாமல் வழிபாடு செய்து விட்டு வரவில்லையா? இப்படியெல்லாம் மாறுதல்கள் சமயத் துறையிலும் செய்துகொள்ளும்போது, தொழில் துறையில் உண்மையை எண்ணிப் பார்க்கத் தயங்கலாமா?

உழவு சிறந்த தொழில் என்றும், உழவர்கள் நல்லவர்கள் என்றும் வெறுமையான வாய்ப் பேச்சுப் பேசுவதில் பயன் இல்லை; அதனால் நாட்டுக்கும் நன்மை விளையாது. உண்மை அதுதானா என்று எண்ணத் துணிய வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழி: உழவன் மகன் ஒருவனுக்கு—உழவுத் தொழில் செய்யும் நல்ல இளைஞன் ஒருவனுக்குத் திருமணம் செய்யவேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்குப் பெண் வேண்டும் என்று ஒரு வியாபாரி வீட்டிலாவது, ஒரு வக்கில் வீட்டிலாவது, ஒரு வைத்தியர் வீட்டிலாவது, ஒரு தாசில்தார் அல்லது மாஜிஸ்டிரேட் வீட்டிலாவது போய்க் கேட்க முடியுமா? பெண் கேட்கும் பேச்சைத் தொடங்குவதற்காவது அவர்கள் இடந்தருவார்களா? அவர்களுடைய பெண்ணாவது அந்த உழவன் மகனை—அவன் படித்திருந்தாலும், உழவுத் தொழில் செய்யப் போவதாக அறிந்தால் மணந்து கொள்ள முன் வருவாளா? இப்படி உழவுத் தொழில் செய்யும் இளைஞன் எவனாவது அவர்கள் வீட்டுப் பெண்ணை மணந்து கொண்டு வாழ முற்படுவானா? இல்லையானால், காரணம் என்ன?

இதை எண்ணிப் பார்த்தால் உழவுத் தொழிலின் உண்மை நிலை தெரிந்துவிடும்.

உழவின் சிறப்பெல்லாம் வாயளவில்தான். உழவன் வாழ்க்கைத் துறையில் முன்னேறுவது குதிரைக் கொம்பு என்பது எல்லோருக்கும் தெரியும். தன் பெண்ணை உழவன் மகனுக்குக் கொடுத்து, அவளை வயலும் பயிரும் போய்க் காணும்படி செய்தால், அவள் வாழ்க்கை அடியோடு கெட்டு விடுமே என்று வியாபாரி, வக்கீல், டாக்டர், தாசில்தார் முதலான எல்லோரும் எண்ணுகின்றார்கள். தப்பித் தவறி அவனுக்கு நகரத்திலிருப்பவர்கள் யாராவது பெண் கொடுக்க முன்வந்தால், அவர்கள் ஏழையினும் ஏழையாக இருக்க வேண்டும்; அவர்கள் அன்றாடக் கஞ்சிக்கு அலையும் கூலிக் காரர்களாக இருப்பார்கள்; அல்லது, அரை வயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் சம்பளக்காரர்களாக இருப்பார்கள்; அல்லது, ஏதாவது தொழிற்சாலையில் வேலை செய்யும் ஏழைத் தொழிலாளர்களாக இருப்பார்கள். அவர்களும் தங்கள் பெண்களை வேறு யாரும் கேட்பாரில்லையே என்று உணர்ந்தால்தான் உழவுத் தொழில் செய்யும் இளைஞர் களுக்குக் கொடுக்க எண்ணுவார்கள்; அப்போதும் ஒருவகை வருத்தத்தோடு வேறு வழி இல்லையே என்ற ஏக்கத்தோடு தான் ஒப்புக் கொள்வார்கள். ஏன்? உழவுத் தொழில் செய்யும் குடும்பங்கள் நாளுக்கு நாள் தாழ்ந்து போவதை அவர்கள் கண்ணாரக் காண்கின்றார்கள். தவிர, தான் பணம் திரட்டியது உழவன் ஏமாந்து தானியங்களை விற்றதால்தான் என்பது வியாபாரிக்குத் தெரியும். உழவனுடைய அறியாமை யால்தான் தான் வழக்காடிப் பணம் சேர்க்க முடிகின்றது என்பது வக்கீலுக்குத் தெரியும். உழவன் அறிவோடு வாழத்

தெரியாத காரணத்தால்தான் தனக்கு வாழ்வும் வளமும் உண்டு என்பது டாக்டருக்குத் தெரியும். உழவன் வாழ்க்கையில் படிப்புக்கும் பாங்கான வருவாய்க்கும் வழி இல்லை என்பது தாசில்தார் முதலான அதிகாரிகளுக்கும் தெரியும்.

இந்த உழவன் வாழ்க்கையில் உண்மையாக உயர்வு உண்டா என்பதை இன்னொரு வகையாக ஆராய்ந்து பார்ப்போம். உழவுத் தொழிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குத் தொழிலாக இருந்து வந்தது. இப்போதுதான் அந்த நிலைமை குறைந்து வருகின்றது. இன்று நகரங்களில் மாடமாளிகைகளில் வாழும் குடும்பங்களின் வரலாற்றைப் பின் நோக்கி ஆராய்ந்து கொண்டே போனால், அந்தக் குடும்பத்து முன்னோர்கள், சில தலைமுறைகளுக்கு முன்னே நாட்டுப்புறங்களில் உழவுத் தொழிலே செய்து வந்தார்கள் என்ற உண்மை விளங்கிவிடும்.

எழெட்டுத் தலைமுறைகளுக்கு, முன்னமே நாட்டுப் புறத்தை விட்டு வெளியேறி, உழவுத் தொழிலைக் கைவிட்டு, நகரத்தில் குடியேறி வேறு தொழில் செய்யக் கற்றுக் கொண்டவர்கள் இன்று வாழ்க்கைநிலையில் உயர்ந்துவிட்டிருக்கின்றார்கள். அவர்கள் மாடமாளிகைகளில் வாழ்கின்றார்கள். அவர்கள் குடும்பத்தில் பிறக்கின்றவர்கள் ஒவ்வொருவரும் வக்கீல், டாக்டர், கலெக்டர் என்பன போன்ற தொழில்கள் செய்து மாதம் ஆயிரக் கணக்காகப் பணம் ஈட்டிவருகின்றார்கள்.

இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு முன்னே உழவுத் தொழிலை உதறி விட்டு நகரங்களை நாடியவர்களும் உயர்ந்த நிலையில் வாழ்கின்றார்கள். அவர்கள் வியாபாரம் செய்து

செல்வராய் வாழக் காண்கின்றோம்; அல்லது வேறு சிறு உத்தியோகங்கள் செய்தாவது கவலையில்லாமல் வாழக் காண்கின்றோம்.

இந்தத் தலைமுறையிலே உழவுத் தொழிலைத் திரும்பிப் பாராமல் விட்டு வெளியேறியவர்களும் ஏறக்குறைய நல்ல நிலையிலேயே வாழ்கின்றார்கள். சில்லறைக் கடை வைத்துக் கொண்டாவது, தையல் தொழில் கற்றுக்கொண்டாவது, வேறு சிறு தொழில் செய்தாவது பணத்தைக் கண்ணால் கண்டு வாழ்க்கை நடத்துகின்றார்கள். அதே நாட்டுப்புறங்களில் மாட்டுத் தரகு, ஆட்டுத் தரகு செய்து பித்தலாட்டத்தால் வாழ்கின்றவர்களும் உழவர்களைவிட நல்ல நிலையில் கவலை குறைந்தவர்களாய் வாழ்கின்றார்கள். இன்னும் சொல்லப் போனால், அந்த உழவர்களுக்காகத் தோசைக் கடை நடத்துகின்றவர்களும், அவர்களிடத்தில் கூலி வேலை செய்கின்றவர்களும் ஏறக்குறைய நல்ல நிலையிலேயே வாழ்கின்றார்கள்.

ஆனால் ஏரைப் பிடித்து உழவுத் தொழில் செய்கின்றவர்கள் மட்டும் நாளுக்கு நாள் சீரழிந்து வருகின்றார்கள். கடன் ஆண்டுக்கு ஆண்டு ஏறி வருகின்றது. கவலை வாரத்துக்கு வாரம் பெருகுகின்றது. இத்தனைக்கும் இடையில் எல்லாருடைய மிரட்டலுக்கும் ஏமாற்றத்துக்கும் ஆளாக வேண்டியிருக்கின்றது. வருகின்ற அதிகாரிக்கெல்லாம் லஞ்சம் கொடுத்து அஞ்சி வாழவேண்டியும் நேர்கின்றது.

உழவர்கள் என்று சொல்லிக்கொண்டு, இருபது முப்பது காணி நிலம் வைத்துக்கொண்டு, வெயிலிலும் பனியிலும் வாடாமல் வருந்தாமல், ஏரையும் எருதையும்

தொடாமல் தொடாமல் வாழ்கின்றவர்கள் உழவர்கள் அல்ல; அவர்கள் முதலாளிகள்; பாங்கியில் பணத்தைப் போட்டுவிட்டுக் கவலை இல்லாமல் வட்டிபெற்று வாழ்கின்ற சோம்பேறி முதலாளிகளுக்கும் இவர்களுக்கும் வேறுபாடு இல்லை. இவர்களும் உழவுத் தொழிலை உதறிவிட்ட வீரர்களே; அதனால்தான் இந்த இன்ப வாழ்வு கிடைக்கின்றது.

தொழில் முறையிலும் வருவாய் தேடும் முறையிலும் மட்டும் உழவன் சீரழிந்திருக்கவில்லை. தன் மக்களை நாகரிகப் பண்பாட்டோடு வளர்க்கும் கடமையிலும் இவன் பின் நிற்கின்றான்; தாழ்ந்து போகின்றான். ஏன்? உழவன் மகன் ஐந்தாவது வரையிலும் படிப்பது அருமை. அந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடம் ஐந்தாம் வகுப்பு வரையில்தான் இருக்கும். அதுவும் சில ஊர்களில் இருக்காது. அயலூருக்கு நடந்துபோய்ப் படித்துவிட்டு வரவேண்டும். அரசாங்கத்தில் பணப் பஞ்சம் வந்தபோது, அந்தப் பள்ளிக்கூடத்தைத்தான், எதிர்பாராமல் மூடிவிடுவார்கள். 'நான் தானே கல்வி வரி கட்டுகின்றேன்' என்று கேட்க உழவனுக்கு வாய் இல்லை. ஒரு வேளை பள்ளிக்கூடம் இருந்தாலும், வேலைக்கு நல்ல ஆசிரியர் வரமாட்டார். பதினைந்து ரூபாய்ச் சம்பளத்துக்கு வந்து ஆவிபோகக் கத்தும் நிலையில் உள்ள கோழைகள் அடிக்கடி அகப்படுவதும் இல்லை. திறமையுள்ள வீரர்கள் அதே ஊரிலோ அடுத்த ஊரிலோ நகரத்திலோ வியாபாரம் செய்தோ வேறு வேலை தேடியோ நன்றாக வாழ முயல்வார்கள். ஆகையால் தப்பித் தவறித் திக்கற்ற ஆசிரியரும் வாய்த்து, பள்ளிக்கூடமும் இருந்தால்

தான், உழவனுடைய மகன் ஐந்தாவது வகுப்பு வரையிலும் படிக்கக்கூடும்.

ஆனால், உழவுத் தொழிலை உதறிவிட்ட நல்வினை உடையவர்களுக்கோ, நகர வாழ்வு, நல்ல பள்ளிக்கூடம், திறமையான ஆசிரியர்கள், சிறந்தவர்களோடு பழகும் வாய்ப்பு, உயர்ந்த கல்லூரிகள், உயர்வதற்கு வேண்டிய வழிகள் எல்லாம் உண்டு. இவற்றிற்கு மேலும் ஒன்று உண்டு. அதாவது, சில மாணவர்களைப் பொறுக்கியெடுத்து, அவர்களை அரசாங்கச் செலவிலே அமெரிக்கா முதலான வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பலவகையான உயர்ந்த கல்விகளைக் கற்றுவரச் செய்யும் ஏற்பாடும் உண்டு. இவற்றில் கோடியில் ஒரு பங்கும் ஏழைப் பிடித்து எங்கும் உழவனுடைய மகனுக்கு இல்லை.

இந்த நிலையில், "சீரைத் தேடின் ஏரைத் தேடு" "மேழிச் செல்வம் கோழைபடாது" என்னும் பழமொழிகள் வாய் வேதாந்தம் அல்லவா? உழவனைப் புகழ்ந்து பேசுவதும் வெறும் பொழுதுபோக்கு அல்லவா? உழவனுடைய மகனுக்குப் பெண் கொடுக்க எல்லோரும் தயங்குவதில் வியப்பும் இல்லை அல்லவா? இவ்வளவு ஏன்? உழவனே தன்னுடைய பெண்ணை உழவுத் தொழில் செய்யாமல் வேறு தொழில் செய்து முன்னேறுகின்ற இளைஞனுக்குக் கொடுக்கவே முயல்கின்றான் அல்லவா?

தமிழன் - அன்றும் இன்றும்

அ. ச. ஞானசம்பந்தன்

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்களைப் பற்றி அறிவது அவசியமா வெனச் சிலர் கருதலாம். சரிதம் மீண்டும் மீண்டும் திரும்புகிறதென ஓர் ஆங்கிலப் பழமொழி யுண்டு. உலகின் பல்வேறு இடங்களிலும் வாழும் மக்கள் எவ்வளவு சிறிய நாட்டினராயினும் தங்களது பழமையைப் போற்றிக் கலையையும் பண்பையும் வளர்க்கவேண்டு மென்று விரும்புகின்றனர். அங்ஙனம் விரும்புகிற பல நாட்டினருக்குப் பழமையான கலைச் செல்வமோ, பண்பாடோ இல்லை. எனினும் என்ன? அவர்கள் ஏதானும் ஒன்றைக் கற்பித்துக் கொண்டு அதனைப் போற்றுகின்றனர். தமிழ் நாட்டில் வாழும் நமக்கு ஒரு சிறந்த பழமை உண்டு. அதை எண்ணுந் தோறும் மனத்தில் ஒரு பெருமிதம் உண்டாகிறது. நாமும் தமிழரெனத் தருக்கித் திரியலாம் எனத் தோன்றுகிறது.

பழங் கதைகள் பேசுவதிற் பயனில்லை எனச் சிலர் கூறக் கேட்கிறோம். அஃது உண்மையே. ஆனால் பழமை பேசுவதால், ஓர் ஊக்கம் பிறக்குமேல், சோம்பர் ஒழியுமேல், ஆண்மை விளங்குமேல், புதிய வாழ்வு தோன்றுமேல், பழமை பேசுவதால் இழுக்கொன்று மில்லை. நாமிருக்கும் நாடு நமதென்று அறியவும், இது நமக்கே உரிமையாம் என்பதுணரவும்,

பழங்கதைகள் வேண்டத்தான் வேண்டும். அதுவும் தமிழரைப் பொறுத்தவரை மிகுதியாக வேண்டும்.

கிறிஸ்து தோன்றுவதற்கு முன்னர்த் தமிழ் நாட்டில் தோன்றிய நூல்களைப் 'பத்துப் பாட்டு' 'எட்டுத் தொகை' 'பதினெண் கீழ்க்கணக்கு' 'எனப் பகுத்தனர். இறுதியில் கூறிய தொகுதியுள் பல, கிறிஸ்துவுக்குப் பின்னர்த் தோன்றியவையே. இம் மூன்று தொகுப்புள்ளும் சில புறப் பொருள் பற்றியன; பல அகப் பொருள் பற்றியன. அகம் என்பது ஒத்த பண்பினராகிய ஒரு தலைவனும், தலைவியும் தம்முள் மனமொத்து இல்லறம் நடத்தும் இயல்பினை இயம்புவது. இதனை யொழிந்த வாழ்க்கையெல்லாம் புறத்தின்கண் இடம் பெறும். மனித வாழ்க்கையை முற்றுங் கண்ட தமிழன், வீட்டினுள் வாழும் வாழ்க்கை, வெளியே வாழும் வாழ்க்கை என இரண்டு பெரும் பிரிவுகளை வகுத்தான். வாழ்வு முழுதும் இதில் அடங்கி விடுதல் காண்க.

முதலாவதாக உள்ள வீட்டு வாழ்க்கை என்று கூறப் படும் 'அகத்திணையை' ஏழு சிறு பிரிவுகளாகப் பிரித்தான். இனி, அவனது அக வாழ்கையை விடுத்துப் புற வாழ்க்கையை அவன் எங்ஙனம் வாழ்ந்தான் என்று காண்போம்.

மனிதனின் புற வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுபவை, நாடு, ஊர், அரசன் சமுதாயம் என்பவையேயாம். பல ஊர்கள் சேர்ந்த ஒரு பெரும் நாட்டை அரசியல் பிழையாது ஓர் அரசன் ஆட்சி செய்வானேயாகில் அங்குச் செம்மையான ஒரு சமுதாயம் ஏற்பட வழியுண்டு.

நாடு, ஊர் என்ற இரண்டும் மனிதனின் உடல் உரம் பெற்று வாழவும், அரசன் சமுதாயம் என்ற இரண்டும் அவன் மனம் உரம் பெற்று வாழவும் பயன்படுகின்றன. இவை நான்கும் செம்மையா யிருப்பின் தனி மனிதன் வாழ்க்கை செம்மைப்படும். செம்மை தனித்தனியே ஏற் படின் சமுதாயம் செம்மை யடையும். எனவே இவை ஒன்றை ஒன்று பற்றியன வென்பது தெள்ளிதின் விளங் கும்.

நாடு சிறந்த தென்று சொல்லும்பொழுது நாம் அதில் வாழும் மக்களையே குறிக்கிறோம். இக் கருத்தை ஔவை யார் ஒரு புறநானூற்றுப் பாட்டில் அழகாகக் குறிக்கிறார்.

"நாடா கொன்றோ, காடா கொன்றோ
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை, வாழிய நிலனே"

எனவே, தமிழன் வாழ்க்கை அன்று நன்றாயிருந்த தென்றால் அதற்குப் பல காரணங்கள் இருந்தன. தமிழ் நாடு தமிழ னுடையதா யிருந்தது. தமிழ் மொழி அரசு வீற்றிருந் தது. நாட்டில் வேளாளரும், வணிகரும் செல்வங் கொழிக்கச் செய்தனர். வறுமை என்பதே தலை காட்டாத நாட்டில் அறிவு வளமும், ஏனைய வளங்களும் கொழித்தல் இயல்பு. எலிசபத் மகாராணியார் காலத்தில் இங்கிலாந்து செழிப்புற் றிருந்தமையின், பற்பல கவிஞர் தோன்றி வாழ்ந்தனர் எனச் சரிதங் கூறுகிறது. அதே போலத் தமிழ் நாட்டில் அற்றை நாளில் பல புலவர் தோன்றி வாழ்ந்தனர். காரண மென்ன? புலவனுடைய உயிரும், மனமும் மிக நுண்மை யானவை. அவை

அடிமை நாட்டில் தோன்றுவதில்லை. ஓரோ வழித் தோன்றி னாலும் நிலைத்து வாழுவ தில்லை. கலைஞன் மனம் பரந்தும் விரிந்தும் இருப்ப தாகும். அத்தகைய மன நிலையை அடிமையாக வாழ்பவர்கள் போற்றுவ தில்லை, குறுகிய மனப் பான்மையும், பிளவுபட்ட மனமுமே அடிமை நாட்டின் அடிப்படை. இதில் எவ்வாறு கவிஞன் தோன்ற முடியும்? இன்றைய நிலையில் தமிழனின் சுதந்திரம் மட்டுமா பறிபோயிற்று? அதனோடு கூடவே அவனது உயர்ந்த மனப்பான்மையும், குறிக்கோளும் பறிபோயின. தமிழன் பழைய நிலைக்கு வர வேண்டுமானால் தமிழ் நாடு தமிழனிடம் வர வேண்டும். நாட்டில் அறிவு—வறுமையும், பொருள்—வறுமையும் ஒருங்கே தொலைய வேண்டும். இங்ஙனம் கூறுவதால் உலக சகோதரத்துவத்துக்கு எதிராகக் குறுகிய கொள்கையைப் பேசுவதாக யாரும் நினைக்க வேண்டியதில்லை. தங்களுக்குள் ஒற்றுமை இல்லாத இருவர் சகோதரராக இருக்க முடியாது. அதே போல, சுதந்திரம் உடையாராய் உலகத்தில் வாழும் ஏனைய மக்களோடு உரிமையற்ற தமிழன் எங்ஙனம் சகோதரத்துவம் கொண்டாட முடியும்? ஆகவே தமிழன் உரிமை பெற்று ஏனையரோடு சம நிலைக்கு வந்த பிறகுதான் உலக சகோதரத்துவத்தை நினைக்கக் கூடும். பழந் தமிழன் அங்ஙனம் வாழ்ந்து நினைத்து, செயலிலும் அதனைச் செய்து காண்பித்தான்.

இது நிற்க. பழந்தமிழன் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அவனது அன்றாட வாழ்வு எங்ஙனமிருந்த தென்று காணவேண்டும். ஏனைய நாடுகளில் இருப்பது போலச் சரித்திரம் தமிழனிடம் இல்லை. ஆனால் அவர்களுடைய சரித்திரங்களைப் புரட்டிப் பார்த்தால், அதில்

மக்கள் வாழ்க்கையைப் பற்றிய உண்மைகள் ஒன்றையுங் காணமுடியாது. அதற்குப் பதிலாக எத்தனை அரசர்கள் வாழ்ந்தார்கள், அவர்கள் எத்தனை பயனற்ற போர்களையும், அட்டூழியங்களையுஞ் செய்தார்கள் என்பவை போன்ற புள்ளி விபரங்கள் காணப்படும். இந்தப் படுமோசமான புள்ளி விவரங்கள் சரித்திரம் என்ற பெயரால் நமக்கு வழங்கப் படுகின்றன. ஆனால் உண்மையான சரித்திரம் எதுவென்றால், அது ஒரு காலத்தில் ஒரு நாட்டில் வாழ்ந்த மக்கள் எத்தகைய வாழ்க்கை நடத்தினர், என்ன உண்டனர், என்ன நினைத்தனர் என்பது பற்றிக் கூறுவதாகும். அப்படியானால் ஒரு காலத்தில் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் மனத்தில் தோன்றும் கருத்துக்களை எழுதி வைத்தல் இயலாத காரியம். எனவே, அவர்கள் சார்பாக யாராவது சிலர் அக்காரியங்களைச் செய்ய வேண்டும். அங்ஙனஞ் செய்கிற அவர்கள் மக்கள் மனத்தை நன்கு அறிந்தவர்களாக இருக்க வேண்டும். சுருங்கக் கூறின், அவர்கள் அக்காலத்தில் வாழும் கவிஞர்களே. அம்முறையில் நோக்கினால் தமிழனிடம் சரித்திரம் நிரம்ப உளது. அதுவும் பாடல் வடிவாகவே யுளது.

(தொடரும்)

மனிதன் பேசினான்

போ. குருசாமி

அமைதிகொலுவீற்றிருந்த அந்தப் பெருங்கானகத்தில் ஒலியே இருக்கவில்லை என்று சொல்ல முடியாது. பலவேறு பறவைகளின் ஒலிகள் கேட்டுக்கொண்டுதானிருந்தன. ஆயினும் அவ்வொலிகள் அடவியின் அமைதியைக் குலைக்கவில்லை; அடவியின் அமைதியை அதிகமாக்கி அழகு தந்து கொண்டிருந்தன. அந்தக் குரல்கள் அங்கே இல்லையென்றால் மயானத்தில் நள்ளிரவில் நிலவும் அமைதிதான் ஆட்சி செலுத்தியிருக்கும். சுடுகாட்டிலும்கூட எரிகின்ற நெருப்பிலிருந்து எழும் ஒரு நுண்ணிய ஒலி உண்டல்லவா? அந்த ஒலிதான் 'உருத்திர பூமி' என்ற பெயரை நினைவுறுத்தும். எனவே, மயானத்தின் அமைதி என்று சொல்ல முடியாது. மயானத்தின் அமைதியைத் தீயின் நுண்ணொலி பயங்கரமானதாக மாற்றுகிறது. அப்படியே, பறவைகளின் ஒலி, சில் வண்டின் கீச்சுக் குரல் இவை அந்தக் கானகத்தின் அமைதியைப் பெருக்கி அழகை ஊட்டின.

பேரரசன் வருகையைக் கண்டால் மன்னவையில் உள்ளோரெல்லாம் அசையாமல் ஆடாமல்—உதட்டைக்கூட அசைக்காமல்—மரியாதையோடு நிற்பார்கள். அவர்களுடைய ஆடைகள்கூட அசைவற்று உடலோடு உடலாய் ஒட்டிக் கொண்டுவிடும். அவர்களுடைய மூச்சுக்கூட நின்று விட்டதோ என்று எண்ணும்படியாக அத்துணை மென்மையாக வெளிவரும். இத்தனை 'ஆரவார' அமைதி எதனால் ஏற்பட்டது? மன்னன் வருகிறான் என்ற உணர்ச்சியினால்,

அந்தக் கானகத்தின் அமைதி—அது எவர் வருகையைக் கருதியதோ தெரியவில்லை. ஏதோ ஒரு பெரிய தெய்வத்தின் வருகையைத்தான் அந்தக் கானகத்து மரங்கள் முதல் விலங்குகள் ஈறாக இருந்த யாவும் எதிர்பார்த்திருக்க வேண்டும். அங்கே உலவிய காற்றுக்கூடத் தேவன் வருகையை எல்லோருக்கும் காதுக்குள் சொல்லிச் செல்வதைப் போல அவ்வளவு மெல்ல இயங்கியது. ஆரவாரத்தோடு சட்டச் சடாரென்று பாறைகளை உருட்டிப் பாய்ந்து வந்த அருவி, அந்த அடவியின் அருகில் வந்தவுடனே அமைதியை மேற்கொண்டு விட்டது. ஆற்றுக்கு யார்தான் அந்தச் செய்தியை அறிவித்தார்களோ, தெரியவில்லை.

அமைதி! ஒரே அமைதி! அமைதியின் ஒலக்கம்!

அதற்கும் ஒரு முறிவு!

அமைதியைக் குலைத்தது ஒரு குரல்.

அமைதி பறந்தது.

ஒலி பரவிற்று.

கணீரென்ற குரல்; தெளிவான உச்சரிப்போடு கானகத்தின் எல்லையையே அளந்துவிட முயல்வதுபோன்ற குரல்.

கணீரென்ற அந்தக் குரலுக்கு எதிராக—பதிலாக—மற்றொரு குரல்.

இனிமையைப் பிழிந்தெடுத்த இசைக்குரல். கீச்சென்ற குரல். தெளிவோடு தேன் இனிமையும் கொண்ட தீங்குரல்.

எப்படி இந்த இரண்டு குரல்கள் பிறந்தன? எவ்வாறு அடவியின் அமைதி குலைந்தது?

அதோ, மீண்டும் அந்தத் திண்மையான ஒலி! எங்கே—யார் அது......?

அந்த உருவத்தை நோக்கி மற்றோர் உருவம் வருகிறது. ஓகோ, அதன் குரல்தான் இனிய இசைக் குரல். சரிதான்.

இரண்டு உருவங்களும் ஒன்றையொன்று வியப்புடன் பார்க்கின்றன. விழுங்கி விடும் ஆர்வம் இரு உருவங்களிலும் பொங்கி வழிகிறது.

எப்படி ஒலி பிறந்தது? அது அந்த இருவருக்கும் தெரியவில்லை. தெரியவில்லை என்று சொல்ல முடியாது. விளக்க முடியவில்லை. விளக்க முயற்சி இருக்கிறது. ஆனால் முடியவில்லை. என்றாலும் தளர்ச்சி இல்லை. புதுமை ஒன்றைக் கண்டுவிட்ட வெற்றி எக்களிப்பு; அந்த எக்களிப்புக் காரணமாக ஒரு புது நம்பிக்கை. ஆம், எப்படி யாவது ஒலியின் பிறப்பை விளக்கி விடலாம் என்ற நம் பிக்கை பிறந்து விட்டது.

அந்த நம்பிக்கைதான் மனிதப் பேச்சின் வித்து; அந்த நம்பிக்கைதான் மொழிகளின் வேர்; அந்த நம்பிக்கைதான் கலைச் செல்வங்களாகிய ஒளி மணிகளின் பட்டை தீட்டப் பெறாத மாணிக்கம்.

ஆம், அந்த உருவத்தில் ஒன்று அவன்; மற்றொன்று அவள்.

முதல் நம்பி அவன்; முதல் நங்கை அவள்.

பறவைகள் இசைத்தன. விலங்குகள் உறுமின. காற்று ஒலித்தது. கடல் முழங்கிற்று. அருவி பாடிற்று.

மனிதன் குரல் எடுத்தான். பல ஒலிகளும் அவன் மனத்தில் போராடின. கடைசியில்...........

மனிதன் பேசிவிட்டான்.

நீதி மன்னன் நெடுஞ்செழியன்

'ஞானம்'

சிலப்பதிகாரத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றிய செய்திகளைக் காண்கிறோம். மதுரைக் காண்டத்தில், பாண்டி நாட்டில் பொற் கொல்லன் சொற் கேட்டுக் குற்றமற்ற கோவலனைக் கொலை செய்ய உத்தரவிடுகின்றான் பாண்டியன். இதனால் அவனது செங்கோல் கொடுங்கோ லாகிறது. எனவே, கண்ணகி ஆவேசம் கொண்டவளாய் அரசை அழிக்கவும் அணி மதுரையைத் தீக்கிரை யாக்கவும் காரண மாகின்றாள்.

பொதுவாக நோக்குமிடத்துக் கோவலன் கொலையால் பாண்டியன் நெடுஞ்செழியன் கொடுங்கோல் மன்னனாகக் காணப்பட்டாலும் அக் கொலைக்கு முன்னும் பின்னும் அவன் நடந்துகொள்ளும் முறையிலிருந்தும், இதர சான்றுகளிலிருந்தும் நெடுஞ்செழியன் நீதி மன்னன் என்று நிச்சயிக்கலாம்.

குடிமக்களுக்குத் தீங்கிழைத்தமைக்காக அழிக்கப் பட்ட முடிமன்னர் பலரின் சரித்திரத்தைக் கேள்விப்பட் டிருக்கிறோம். இவற்றில் உலகோர் கவனத்திலிருந்து இன் னும் அகலாமலிருப்பது இங்கிலாந்தின் முதலாம் சார் லஸ் மன்னன், ரஷ்ய ஜார் சக்கரவர்த்தி ஆகியோரின் வீழ்ச் சியே யாகும். ரஷ்ய ஜார் மன்னன் குடிகளுக்குச் செய்த கொடுமை கொஞ்சமன்று. ஜார் ஆட்சியில் 'இம் என்றால் சிறை வாசம், ஏனென்றால் வனவாசம்' என்கிறார் பார

தியார். புரட்சிக்காரர்களால் கோர வதை செய்யப்படும் வரை ஜார் மன்னன் தன் தவறை உணர்ந்து அதற்காக வருந்தித் தானாகவே கழுவாய் தேடினான் இல்லை. இங்கிலாந்து மன்னன் முதலாம் சார்லஸ் நிகழ்ச்சியும் அப்படியே.

மேற் சொன்ன மேலை நாட்டுக் கொடுங்கோலர்களுக்கும் நமது தமிழ் மன்னன் நெடுஞ்செழியன் செங்கோல் பிறழ்ந்ததற்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. மேற்படி மன்னர்கள் மக்களால் வீழ்த்தப்பட்டனர். ஆனால் பாண்டி வேந்தனோ தன் தவறை உணர்ந்த அளவே அதற்குக் கழுவாயாகத் தானே வீழ்ந்து பட்டான். இதை இளங்கோவடிகள் பின்வரும் வெண்பாக்களில் சித்திரந் தீட்டிக் காட்டுகின்றார்.

"காவி யுகுநீரும், கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்-பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயினான்

மெய்யிற் பொடியும், விரிந்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும், கண்ணீரும்-வையைக்கோன்
கண்டளவே தோற்றான்; அக் காரிகைதன் சொல்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்"

பாண்டியன் நெடுஞ்செழியன் அற்றைநாள் வரை தவறு செய்யாதவன் என்பதும், கோவலன்பால் அவன் இழைத்த கொடுமையும் மதிப் பிசகால் நிகழ்ந்ததே என்பதையும் வேறு பல சான்றுகளாலும் அறிகின்றோம்.

திருக்குறளில் வள்ளுவனார் அரசனுக்கு இலக்கணம் கூறுகையில் காட்சிக் கெளியனாகவும், கடுஞ்சொல்லன்

அல்லனாகவும், செவிகைப்பச் சொற் பொறுப்பவனாகவும் இருப்பவனை பண்புடை வேந்தன் என்கின்றார். வள்ளுவர் கூறும் இந்த இலக்கணத்திற்கு முற்றும் இலக்காயிருந்தான் நெடுஞ்செழியன்.

தன்னிடம் முறையிட்டுக்கொள்ளக் கண்ணகி அரண்மனை வாயிலை அடைந்திருப்பதை அறிந்ததும் "அவளைத் தருக" என்றதனால், நெடுஞ்செழியன் குடிகளின் காட்சிக் கெளியவனாயிருந்தமையும், தன்முன் நின்ற கண்ணகி தன்னைத் "தேரா மன்னா!" "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!" என்றெல்லாம் சுடுசொல் சொல்லிய போது பொறுத்ததால் "செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்" என்பதையும் அறிகிறோம்.

மற்றும், கண்ணகி அடங்கா ஆவேசங்கொண்டு சினந்து பேசிய போதும் "பெண் அணங்கே! கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று" என இனிய மொழிகளால் தனது கட்சியை எடுத்துரைத்ததால் "கடுஞ்சொல்லன் அல்லன்" என்பதையும் காண்கிறோம்.

இனி, ஐரோப்பாவில் மன்னர்களை வீழ்த்திய மக்களின் மனோநிலைக்கும், பாண்டி நாட்டில் நெடுஞ்செழியன் வீழ்ந்து பட்டதற்குக் காரணமாயிருந்த தமிழ் மகளாம் கண்ணகியின் மனோநிலைக்கும்கூடப் பெருத்த வேற்றுமையைக் காண்கிறோம். அங்கே அக் கொடுங்கோல் மன்னர்களால் மக்கள் சமுதாயம் முற்றும் கவலை கொள்ளத் தக்க நிலையில் அந்நாடுகளின் "செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்துவிட்ட" போது தான் ஜனசக்தி எழுந்து கிளர்ச்சி செய்தது.

ஆனால், பாண்டி நாட்டில் நெடுஞ்செழியன் தனது ஆட்சியில் இழைத்த முதல் தீங்கு கோவலனைக் கொன்றதே யாகும். "வளையாத செங்கோல் வளைந்ததே" என்று இளங்கோவடிகள் கூறுவதும்

"..............காதின்
மறைநா வோசை யல்லது யாவதும்
மணிநா வோசை கேட்டதும் இலனே;
அடிதொழுது இறைஞ்சா மன்ன ரல்லது
குடிபழி தூற்றும் கோலனு மல்லன்"

என்ற மதுராபுரி தெய்வத்தின் கூற்றும் இதை வலி யுறுத்தும்.

மற்றும், மதுரை மக்கள் பாண்டியன் நீதி பிழைத் ததைக் கண்ணகியால் அறிந்த பின்னரும், "மண் குளி ரச் செய்யும் மறவேல் நெடுந்தகை தண்குடை" என்று அவன் கொற்றக் குடையின் தன்மையைப் போற்றுவ தாலும் அறிகிறோம். அப்படியிருந்தும் கண்ணகி "தீ வேந்தன் பாற்சென்று திறம்கேட்பல் யான்" என்று அரண்மனையை நோக்கி விரைந்ததாலும் "ஓட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்" என்று வஞ் சினம் கூறி மதுரையைத் தீக்கிரை யாக்கியதும் எதை உணர்த்துகிறது? "அரசன் ஒரு முறை நீதி பிழைக் கினும் அவனது ஆட்சி அழித்தற் குரியதே ஒழிய ஆளு தற்குரியது அன்று" என்ற தமிழ் மக்களின் மனோ பாவத்தையும் காண்கிறோம்.

பாண்டி மன்னன் தான் செங்கோலனா யிருத்தல் வேண்டும் என்ற பேராவல் கொண்டவன் என்பதைப் புறநானூற்றிலுள்ள அவனது பாடலொன்றினாலும் அறி

இன்றோம். தன்னை யெதிர்த்துப் புறப்பட்ட ஒன்பதின் மரைத் தலையாலங்கானத்தில் போரிடப் புறப்பட்டபோது அப் பகைவரைப் புறங்கண்டு வெற்றி காணுவிடில்,

எங்நிழல் வாழ்நர் செல்நிழல் காணது
'கொடியன் எம்இறை' எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக

என்று தன் செங்கோல் மீது ஆணைவைத்துச் சென்றமை யால் அறிகிறோம்.

பாண்டி வேந்தனின் நீதியை இளங்கோவடிகளும், மதுரைக் குடிகளும் புகழ்ந்ததை மேலே கண்டோம். சேரன் செங்குட்டுவனும் நெடுஞ்செழியன் இறந்ததைக் கேள்வியுற்றதும்

"எம்மனோ ரன்ன வேந்தர்க் குற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை உறுக, ஈங்கென்
வல்வினை வளைத்த கோவலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"

என்று நீதிக்கு உயிர் கொடுத்த நெடுஞ்செழியன் தியாகத்தைப் போற்றுகின்றான். இதுவரை கூறியவாற்றால் பாண்டியன் நெடுஞ்செழியன், குடிமக்கள் போற்றும் கொற்றவன், கவியரசர் போற்றும் காவலன், புவி மன்னர் வாழ்த்தும் புரவலன் என்பதை அறியலாம். அதுமட்டுமல்ல; "புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின் உலகொடு வரினும் கொள்ளலர்" என்ற பழந்தமிழ் மரபுக்கு நெடுஞ்செழியன் வரலாறு மற்றோர் எடுத்துக்காட்டு.

தாய்

'வல்லிக் கண்ணன்'

'சீ மூதேவி! அதுக்குள்ளேயுமா இந்தத் தொழிலை ஆரம்பிச்சுட்டே!' என்று எரிந்து விழும் குரலைக் கேட்டு பிளாட்பாரத்திலே நின்ற நான் திரும்பிப் பார்த்தேன்.

ஒருவர்—நாகரிகமும் பணமும் போட்டியிட்டு அழகு செய்யும் கனவான்—கடையிலே சோப்பு வாங்கிக்கொண்டு நின்றார். அவர்தான் அந்த வார்த்தைகளைச் சொல்லி யிருக்கவேண்டும்.

எனது கண்கள் அவர் அருகே வட்டமிட்டன. சிறிது நகர்ந்து சென்றுவிட்ட ஒரு பிச்சைக்காரப் பிள்ளையை—ஏழ்மையின் அவதாரந்தான்—எட்டிப் பிடித்தது எனது பார்வை.

சூம்பி எறிந்த பனங்காய்போலத் தோற்றம் அளிக் கும் பரட்டைத் தலை. இடுப்பைச்சுற்றி அழுக்குப் படிந்து—அதிலே இனி அழுக்கு ஏற முடியாது—தாறுமாறுகத் தையல் ஓடிய துணி. தொங்கலாக வளர்க்கப்பட்ட காது களில் ஊசலாடும் இரண்டு வளையங்கள். அக் குழந்தை யின் கண்களிலே ஒரு குறுகுறுப்பு. ஏழையாயினும் என்ன! இயற்கையின் இன்பக் கூத்து ஆனந்தம் துள்ளும் அக் கண்களிலே துடித்தது. வயது ஐந்து, ஆறுதான் இருக்கும். அந்தப் பிச்சைக்காரப் பிள்ளையைத்தான் அவர் அப்படிக் கேட்டார்.

அந்தப் பிள்ளை ஏக்கம் நிறைந்த பார்வையுடன் அவரை விட்டுச் சிறிது நகர்ந்தது. அவர் சினைத்துக் கொண்டே சொன்னார்: 'இந்தப் பிள்ளைகளுக்கே சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. குலமுறைத் தொழில் இது. மூதேவிகள்!'

அவரது நண்பர் அதில் ஏதோ நகைச்சுவையைக் கண்டவர் போல விழுந்து விழுந்து சிரித்தார். 'ஆமாம், இது கூட பிஸினெஸ் டிரிக்தான். இந்தக் குழந்தையின் தாய் தகப்பன் எங்காவது படுத்துக் கிடப்பாங்க. தடி மாடாட்டம் அவங்க வந்தா பிச்சை அவ்வளவாகக் கிடைக்காது பாருங்க, அதனாலே சிறு பிள்ளைகளை அனுப்புகிறது' என்றார்.

பணக்காரர் ஒத்து ஊதுகிறவர் போலத் தலை யசைத்தார். நண்பர் 'இப்போ வேணும்னாலும் பாருங்களேன்; இந்தப் பிள்ளையோட தாய் எங்கேயாவது குந்தால இருப்பா. குழந்தை அலையுது. இதுட்டேயே கேட்போமே!' என்று சொல்லி 'ஏ புள்ளே...ஏய்!' என அழைத்தார்.

பிச்சைக்காரக் குழந்தை பயந்துவிட்டது. அது பிரண்டு சுழன்ற கண்களிலேயே நன்கு பிரதிபலித்தது. நடுக்கத்துடன் நகர்ந்துவிட எத்தனித்தது குழந்தை.

அதை யறிந்த நண்பர், 'ஒண்ணுமில்லே புள்ளே. சும்மா வா. துட்டுத் தாரேன்' என்று அன்பு குழையும் குரலில் கூப்பிட்டார். அன்னியரைக்கண்டு அஞ்சி விலகும் நாய்க்குட்டி கை நீட்டிக் கூப்பிட்டதும் அசைந்து அசைந்து

கண்களிலே இரக்கம் சிந்தும் பார்வையுடன் வருவது போலவே அந்தப் பிள்ளையும் வந்தது.

'ஏ புள்ளே, உனக்கு அம்மா அப்பா இருக்காகளா?' என்று கேட்டார் நண்பர்.

'இருக்காங்க' என்பதுபோல் தலையை அசைத்தது அப்பெண்.

'எங்கே இருக்காக? என்ன செய்ருக?'

'அங்கே ஒரு பாழடைந்த மண்டபத்திலேதான் இருக்கிறாங்க. எங்க அப்பனுக்கு இரண்டு மூணு நாளாக் காய்ச்சல்; அம்மா அதுனாலே அவருகிட்டேயே இருக்கா'

நண்பர் வெற்றிப் புன்னகையுடன் மற்றவரைப் பார்த்து "பார்த்தேளா! இது வழக்கமான பாடம். அதைத்தான் 'ஒப்புவிக்குது குழந்தை' என்றார். பிறகு பிச்சைக்காரப் பிள்ளையிடம் 'ஏ புள்ளே, பொய் சொல்லப்படாது. உன் அப்பனுக்குக் காய்ச்சல்தானா?' என்று கேட்டார்.

அந்தப் பெண்ணோ இரண்டு கைகளையும் குவித்து, 'ஆமா, சாமி நெசமாக்காச்சல்தான். இல்லேன்னா அம்மாகூடப் பிச்சை எடுக்க வருவா' என்றது. அப்பொழுது அக்குழந்தைக் குரலிலே தொனித்த கொஞ்சலும் முகபாவமும் கண்களின் ஏக்கமும் என் மனத்தில் என்னவோ செய்தன.

"இவர்களுக்கென்ன? பிச்சை போடுவதாயிருந்தால் கொடுக்கட்டுமே, ஏன் வீணான கேள்விகள்?' என முணுமுணுத்தது என் இதயம்.

அப்பொழுது 'சாமி... காசு கொடுங்க! ......நல்லா ருப்பீங்க சாமி' என்று கொஞ்சல் எழுந்தது.

நண்பர் காலணு வீசி எறிந்தார். கீழே விழுந்த காசை எடுத்துக்கொண்டே முகத்தில் நன்றி ஒளி பட, 'சாமி, நீங்க காலணுப் போடுங்க' என்று பணக்காரரிடம் கையை நீட்டியது அப்பெண்.

'சீ போ மூதி' என்று சள்ளென விழுந்தார் அவர். கல் லெறிபட்ட நாய்க்குட்டி போல அப்பிள்ளை தலையைக் கவிழ்த் துக்கொண்டே அப்பால் நகர்ந்தது.

நானும் எனது தொழிலைக் கவனிக்கச் சென்றேன்.

மாலை நேரம். மறையும் செங்கதிரோனின் கிரணங்கள் சிதறி எல்லாப் பொருள்களையும் ஓரே சோகமயமாய் மாற்ற முலாம் பூசமுயலும் வேளை. மாடி ஜன்னலருகே ஏதோ எண் ணத்தில் ஆழ்ந்து அமர்ந்திருந்தேன்.

'எட்டி, தெருவிலே என்ன விளையாட்டு? மோட்டாரு வரப்போகுது' என்றகுரல் என்னைத் திடுக்கிட்டுத் தெருவைப் பார்க்கும்படி அழைத்தது. எனது கண்கள் அப்பொழுது தான் தெருவிலே மண்ணை அளைந்து விளையாடிக்கொண் டிருந்த நாலு வயதுக் குழந்தையை அன்புடன் அதட்டி, வீட்டினுள் அழைத்துச் செல்லும் ஒரு தாயைக் கண்டன.

அவளுக்குத்தான் குழந்தைமேல் என்ன அன்பு! எடுத்து இடுப்பில் அணைத்துக் கொண்டாள் அவள். குழந்தை மேல் படிந்த அழுக்கு தன்மீது ஒட்டிக் கொள்ளுமே என்ற எண்ணமே இல்லை அவளுக்கு. அவள், உள்ளத்திலே பாசம் கொந்தளிக்கும் தாய்

என் மனம் சுழன்று சுழன்று காலையில் கண்ட பிச்சைக்காரப் பிள்ளையைப் பிடித்தது.

அதுவும் குழந்தைதானே? அதற்கும் ஒரு தாய் இருக்கின்றாள். அவள் மனத்திலே அன்பு ஊற்றுப் பெருக்கெடுத்தோடவில்லையா? இல்லை, வறுமையிலே உழன்று உழன்று அவள் மனமும் வறண்டு போயிற்றா? தன் குழந்தைமீது பாசம் இருந்தால், தான் எங்கோ 'சுகமாக இருந்துகொண்டு' பிள்ளையைப் பிச்சை எடுக்க அனுப்புவாளா?

இராது. பட்டணத்திலே யமன்போலப் பாயும் மோட்டார்கள் தாறுமாறாகத் திரியும் நடுத்தெருவிலே பிச்சை எடுக்கும்படி தனியாகத் தன் குழந்தையை அனுப்பமாட்டாள் தாய். அவளுக்கு வியாதி; அதனால்தான் வரவில்லையோ என்னவோ! அந்தக் குழந்தை பொய்யா சொல்லப் போகிறது? அதனுடைய அப்பொழுதையத் தோற்றம் அப்படி இல்லையே!

என் மனம் சுழன்றுகொண்டிருந்தது. நான் எங்காவது போய்ச் சுற்றிவிட்டு வரலாமென்று கிளம்பினேன்.

நான் நடந்து நடந்து ஊரின் வெளிப்புறத்திலிருந்த ஒரு மண்டபத்தின் அருகிலேயே வந்துவிட்டேன். அங்கு வசித்த இரண்டு வறுமை விக்ரகங்களைக் கண்டேன். ஒன்று ஆண்; ஒன்று பெண். இவர்கள்தான் அந்தப் பிச்சைக்காரப் பிள்ளையின் பெற்றோர்கள் போலும்!

அவன் வியாதியால் அடிபட்டவன்போல அழுக்குப் பிடித்த துணியால் மூடிக்கொண்டு கீழே கிடந்தான். அவள் ஏக்கமும் துயரமும் முகத்திலே வீச அவன் அருகே உட்கார்ந்திருந்தாள்.

பக்கத்துத் தெருவிலே கிளம்பிய 'தாயே, தாயே' என்ற பாட்டு—அபூர்வ ராகத்திலே அந்தப் பிச்சைக்காரப் பெண் ணத்தும் தொடரான அலறல்—காற்றிலே மிதந்து வந்தது. சிறிது நேரத்திலேயே அந்தப் பிள்ளையும் பார்வையில் தென் பட்டது. கவலையற்ற ஜீவன்போலத் துள்ளிக் குதித்துக் குதித்து நடந்தது குழந்தை.

பின்புறத்தில் வேகமாகப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்தது ஒரு மோட்டார், நாகரிக யமனைப்போலே!

என்து தேகத்திலும் ஒருவித அதிர்ச்சி ஏற்படவே, 'ஏ புள்ளே......ஏ புள்ளே! மோட்டார்' என அலறினேன். வெளியே எட்டிப் பார்த்த தாயும் 'எட்டி, எட்டி! ஐயோ......' எனக் கதறினாள்.

ஆனால், அதற்குள்ளாக அருகில் வந்த மோட்டார் அந்தப் பிள்ளையை அடித்துக் கீழே தள்ளிவிட்டது. 'ஐயோ...என் புள்ளே' என்று அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தாள். ஒரு தாயின் துயர ஓலத்தை உணர்ந்தேன் நான்.

'கிரீச்' எனும் கதறலுடன் கார் நின்றது. 'ச்...ச்..ச்' நாக்கைக் கொட்டிக்கொண்டே இறங்கினார் ஒருவர். அவர் தான்! ஆம், சந்தேகமே இல்லை. காலையிலே கடையில் கண்ட கனவான் தான்.

அவள் பிள்ளையை வாரி எடுத்து மேலே சாய்த்தாள். குழந்தையின் மூக்கிலிருந்தும், மண்டையில் ஏற்பட்ட வெட் டிலிருந்தும் இரத்தம் பெருக்கெடுத்து வடிந்தது. 'ஐயோ என் புள்ளே!' என அலறினாள் அவள்.

'சவம்! ரோட்டிலே நடக்கையிலே பார்த்து நடக்கவேண்டாம்? மூதேவிகளுக்கு மூளையே கிடையாது......போவுது என்னமோ காயம்பட்டிருக்கு. ஜாக்கிரதையாக் கவனி. இந்தா பிடி' என்று கனவான் மணிபர்ஸிலிருந்து ஒரு ரூபாய் எடுத்து நீட்டினர்.

தாய் ஓலமிட்டாள்: 'ஐயோ! குழந்தையைக் கொன்னு பூட்டியே! பாவி, எனக்கு ரூபாய் என்னத்துக்கு?'

'சீ மூதி! பார்த்துப் பேசு' என்று ரூபாயை வீசி விட்டுக் காரில் ஏறி அமுக்கினர் அவர். மோட்டார் புழுதிப் படலத்தைக் கிளப்பிக்கொண்டே மறைந்தது.

அந்தப் பாழ்வெளியிலே, மனிதக் கூட்டமற்ற தனி இடத்திலே, இரத்தம் பெருக்கும் குழந்தையை முன்கிடத்தி அழுதுகொண்டிருந்தாள் அவள்; லோகிதாசன் முன் அமர்ந்து அழும் சந்திரமதிபோல! அருகே பணத்திமிரின் பிரத்தியட்சப் பிரமாணமாகக் கிடந்தது ஒரு வெள்ளிக்காசு. அவள் அதைக் கவனிக்கவே இல்லை.

'ஐயோ என் புள்ளே...என் புள்ளே!' என்று அலறிக் கொண்டிருந்தாள் அவள். தாங்கமுடியாத சோகம். உள்ளே—மண்டபத்தில்—வியர்தி வெறியிலே மயங்கிக் கிடந்த அவன் 'ஐயோ' என முனகினன்.

அவளது அலறலிலே, சோகப் புலம்பலிலே, ஒரு தாயின் உள்ளத் துடிப்பை, இதயத்தின் ஏக்கத்தை உணர்ந்த என் மனம் முணு முணுத்தது.

'அவள் ஒரு தாய். பிச்சைக்காரியாயினும் பணக்காரியானலும் குழந்தைகள் விஷயத்திலே எல்லோரும் சமம். அவள் 'தாய்' என்ற ஒரு முறைதான்!'

மதிப்புரை

சங்க இலக்கியம்

[வார வெளியீடு. உரையாசிரியர் : திரு. சி இலக்குவர். கிடைக்கும் இடம் : சாவலத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி. விலை - 0 - 1 - 0]

தமிழர் செல்வமாகிய சங்க இலக்கியத்தைப் பரப்பும் நோக்கத்தோடு நடைபெறும் இவ்வெளியீடு மிகவும் பாராட்டுதற்குரியது. நல்ல முயற்சி; தமிழர் ஆதரிக்க வேண்டிய முயற்சி.

சிலப்பதிகாரம் (புகார்க் காண்டம்):

[உரையாசிரியர் : சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் ; வெளியிட்டோர்: புதுமலர் நிலையத்தார் ; 288 பக்கங்கள் ; விலை ஐந்து ரூபாய்]

தெளிந்த உரை; உயர்ந்த பதிப்பு; குறைந்த விலை. நூலின் முகப்பில் சோழ மன்னனின் கொடி காட்சியளிக்கின்றது. அக் கொடியில் வீறு கொண்டு சீறிப் பாய்வது போன்றுள்ள வேங்கைப் புலியின் தோற்றம் கருத்தைக் கவர்கின்றது. சிறந்த அரசியல் அறிஞரான சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் அரசியல் கண்ணோக்குடன் சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து இன்றைய அரசியல் உலகில் சிலப்பதிகாரத்தின் பயனை விளக்காதது ஏமாற்றத்தை அளிக்கின்றது. இனி வெளிவரவிருக்கும் இரண்டு காண்டங்களிலேனும் இக்குறை பூர்த்திசெய்யப் படுமென்று நம்புகின்றோம்.

இந்து முஸ்லிம் ஏக்ஓ!

[ஆசிரியர் : 'முத்தமிழ்மணி' : வெளியீடு : முத்தமிழ்ப் பண்ணை சென்னை. விலை : 1 - 0 - 0]

தமிழ் நாட்டுக்கு அவசியமில்லாத பிரச்சினையைப் பற்றி அழகாக எழுதப்பட்ட தமிழ்ப் புத்தகம். தமிழ் நாட்டில் இந்து-முஸ்லீம் என்ற சமய வேறுபாடு வேண்டாத ஒன்று; நினைக்கவும் கூடாது. தமிழன் என்ற நினைவே மலர்தல் வேண்டும். நூலின் பெயரே இது வட நாட்டு விவகாரம் என்று தெரிவிக்கிறது. ஆசிரியர் நன்கு எழுதக் கூடியவர் என்பது தெரிகிறது.

Edited & published by M. P. Sivagnanam at 233, Linga Chetty Street, Madras—1.
Printed by K. C. Nagalinga Mudaliar at the Sengunthamithran Press Madras.

தமிழன் குரல்

ஆசிரியர்:

திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்

புதிய தமிழகத்தை—
தமிழகத்தில் தனியரசைக்
காண விரும்பும்
தமிழ் இனத்தவருக்கு
இந்நூல் வழிகாட்டி

தமிழர் திரு விழாவாகிய

தைப் பொங்கல்

நாளில்

வெளிவரும்

100 பக்கம் விலை ரூ. 1—0—0

தமிழ் முரசுப் பதிப்பகம்

DENTOMAG-டென்டோமாக்

ஸ்வாதி-பற்பொடி

வெற்றிலை பாக்கு உபயோகிப்பதால் 'டார் டார்' என்னும் காவியும்; பீடி சிகரெட் குடிப்பதால் 'நிகோடின்' என்னும் புகைக் காவியும் பற்களிலும், பல்லின் இடுக்குகளிலும் ஏற்படுகின்றன. அவைகள் சரியானபடி போக்கப்படாவிட்டால், பற்களுக்கும், பிறகு தேகத்திற்கும் கெடுதலை உண்டாக்கக்கூடிய கிருமிகள் உற்பத்தியாகின்றன. ஆகையினால் அவைகள் மனிதர்களின் சுகவாழ்விற்கே உலை வைக்கும் எதிரிகளாகின்றன.

மேற்கூறிய காவிகளை அகற்றவேண்டியது நம் முதல் கடமை. 'ஸ்வாதி' பற்பொடியில் காவிகளை அகற்றவும், அவைகளில் கிருமிகள் உற்பத்தியாகியிருந்தால் அவைகளை நாசம் செய்வதற்குமான தகுந்த ரசாயனச் சத்துக்கள் அடங்கிய சாமான்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன

பயோரியா ஈருகளில் ரத்தம் வாய் நாற்றம் முதலியவைகளையும் போக்கக்கூடிய ரசாயனச் சத்துக்களும் கலக்கப்பட்டிருக்கின்றன.

'ஸ்வாதி' பற்பொடி மேற்கூறிய யாவற்றையும் சீக்கிரமாய்ப் போக்கிப் பற்களைப் பால்போல் வெண்ணிறமாக்கும்.

அகில இந்தியக் காதி சுதேசிக் கண்காட்சியில் 158-ம் எண்ணுள்ள எங்கள் கடையை வந்து காணுங்கள்.

ஸ்வாதி பிராடக்ட்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி 655, மதராஸ்

Cover Page Printed at Vani Printing Works,
156, Rasappa Chetty Street, Q. No. 184, P. T., Madras.